# அனகாபுத்தூர் நகராட்சி

## சென்னை – 600 070.

கூட்ட எண்.46/2019 நாள். 04.09.2019

04.09.2019ம் நாள் புதன்கிழமை காலை 11.30 மணியளவில் அனகாபுத்தூர் நகராட்சி அலுவலகத்தில், அனகாபுத்தூர் நகராட்சி தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களால் நடத்தப்பெறும் சிறப்பு கூட்டப் பொருள் .

**பொருள் எண். 1**

அனகாபுத்தூர் நகராட்சியில் தமிழ்நாடு நகர்ப்புர சாலைகள் உட்கட்டமைபு திட்டம் 2019–20 திட்டத்தின் கீழ் சாலை பணிகள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், நகர் நிர்வாக அலுவலக வளாகம், சாந்தோம் நெடுஞ்சாலை, இராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 600 028 அவர்களின் கடிதம் ந.க.எண்.17349/2019/இ3 நாள்.03.09.2019ன்படி மதிப்பீட்டுத் தொகை ரூ.2.00 கோடிக்கு கீழ்கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கீழ்காணும் நிதி ஒதுக்கீடு ஏற்புடையதாயின் சாலை பணிகளை மேற்கொள்ள குறிப்பிட்டுள்ள மதிப்பீட்டுத் தொகைக்கு நகர்மன்ற தீர்மானம் இயற்றி அதனை நிர்வாக அனுமதி வழங்கும் பொருட்டு அனுப்பி வைக்க கோரப்பட்டுள்ளது.

(ரூ.கோடியில்)

| நகராட்சி / மாநகராட்சியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை | தமிழ்நாடு நகர்ப்புர சாலைகள் மேம்பாட்டு திட்ட மானிய நிதி | மாநில நிதிக்குழு/மத்திய நிதிக்குழு மானிய நிதி / நில அபிவிருத்திக் கட்டணம் | நகராட்சி பங்களிப்பு |
|---|---|---|---|---|
| அனகாபுத்தூர் | 2.00 | 0.40 | 1.20 | 0.40 |

மேற்படி நிதி ஒதுக்கீட்டிற்கு கீழ்கண்ட சாலைகள் குடிநீர் குழாய்கள் அமைக்கப்பட்ட பழுதான சாலைகளை சீரமைக்க வேண்டி பணிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | வார்டு எண்.1 – சாமுண்டீஸ்வரி நகர் பவானி தெரு முதல் சஞ்சய் காந்தி நகர் பிரதான சாலை, வார்டு எண்.2 – கௌரி அவென்யூ முதல் தெரு, வார்டு எண்.3 – அடஞ்சியம்மன் கோயில் தெரு, வார்டு எண்.4 – வெங்கடேஸ்வரா நகர் கம்பர் தெரு, வார்டு எண்.5 – பாலாஜி நகர் விரிவு வெங்கடேஸ்வரா தெரு, பாலாஜி நகர் விரிவு ராஜீவ் காந்தி தெரு, அன்னை இந்திரா காந்தி தெரு, வார்டு எண்.7 – அண்ணா நகர் 2வது பிரதான சாலை, வார்டு எண்.8 – மூர்த்தி நகர் பிரதான சாலை, மூர்த்தி நகர் முதல் குறுக்கு தெரு, வார்டு எண்.15 – அமரேசன் நகர், வார்டு எண்.16 – | 200.00 |

| | | |
|---|---|---|
| | திருநீர்மலை ரோடு 2வது தெரு, வார்டு எண்.17 – கரிகாலன் நகர் செங்குட்டுவன் தெரு, கரிகாலன் நகர் ராஜாஜி தெரு, வார்டு எண்.18 – நேதாஜி நகர் பிரதான சாலையில் தார் சாலை அமைத்தல் பணி | |

**அலுவலகக்குறிப்பு : 1.**மன்றம் அனுமதியளிக்கலாம்.

2. 2019–20ம் ஆண்டிற்கு தமிழ்நாடு நகர்ப்புர சாலைகள் உட்கட்டமைப்பு திட்டத்தின் கீழ் இயற்கை இடர்பாடுகள் மற்றும் புதிய குடிநீர் திட்டத்தின் கீழ் குடிநீர் குழாய் அமைக்கும் பணிக்காக தோண்டப்பட்டு பழுதடைந்த சாலைகள் தேர்வு செய்யப்பட்டதை அனுமதியளிக்கலாம்.
3. 2019–20ம் ஆண்டிற்கு தமிழ்நாடு நகர்ப்புர சாலைகள் உட்கட்டமைப்பு திட்ட மான்ய நிதி ரூ.0.40 கோடியும், மாநில நிதிக்குழு / மத்திய நிதிக்குழு மான்ய நிதி / நில அபிவிருத்திக் கட்டணம் ரூ.1.20 கோடியும், நகராட்சி பங்களிப்பு தொகை ரூ.0.40 கோடியும் ஆக மொத்தம் ரூ.2.00 கோடிக்கு பணி மேற்கொள்ள நிர்வாக அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக ஆணையர், நகர் நிர்வாக அலுவலக வளாகம், சாந்தோம் நெடுஞ்சாலை, இராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 600 028 அவர்களுக்கு அனுப்பி வைக்க மன்றம் அனுமதியளிக்கலாம்.

தனி அலுவலர்
அனகாபுத்தூர் நகராட்சி